# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 31 December - 2018 Issue - 12


ஆசிரியர் உரை

## தீர்மானிப்போம்

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைப் பின்பற்றும் மெய் கிறிஸ்தவம் ஒரு ''மார்க்கம்''அல்லது ''வழி'' என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்தபோதிலும், உலகமானது கிறிஸ்தவத்தை ஏனைய மதங்களில் இதுவும் ஒன்று என்ற அளவில் தான் பார்க்கிறது. அப்படியே வைத்துக் கொண்டால், உலகில் காணப்படும் பிற மதங்களுக்கு தீர்மானம் என்னும் வார்த்தையோடு இருக்கும் தொடர்புக்கும், கிறிஸ்தவத்தோடு இவ்வார்த்தைக்கு இருக்கும் நெருக்கத் திற்கும் ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. எப்படியெனில், தீர்மானம் என்னும் வார்த்தையை கிறிஸ்தவம் பயன்படுத்துவது போல, அதுவும் வருடத்தின் இறுதி நாட்களில் பயன்படுத்துவது போல வேறு எந்த மதமும் பயன் படுத்துவதில்லை. ஆம், அது பெற்றோர்களால், பிள்ளைகளுக்குப் பேசப்படும் வார்த்தையாக, போதகர்களால் சபையாருக்குப் பிரசங்கிக்கப்படும் வார்த்தையாக, சபை விசுவாசிகளுக்கு முன்னோடிகளால் வலியுறுத்தப்படும் வார்த்தையாக, இன்னும் அங்கத்தினர்களால் சிந்திக்கப்படும் வார்த்தையாக இருக்கும். இறுதியில், ஒரு வகையாகக் கொஞ்சம் பேரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக மாறும். ஒரு வேளை, அது அற்ப ஆயுளைக் கொண்டதாக இருந்தாலும் இது தான் யதார்த்தம்.

ஆர்வத்தோடு மேற்கொள்ளப்படும் இப்புத்தாண்டுத் தீர்மானங்கள் அற்ப ஆயுளைக் கொண்டது என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்கிறீர்களா? கவனியுங்கள்.

காலங்காலமாக, வருடத்தின் இறுதி நாட்களில் எந்தவிதக் கூச்சமுமில்லாமல் கிறிஸ்தவ சமுதாயத்திற்குத் தீர்மானம் பற்றித் தொடர்ந்து பேச வேண்டியிருக்கிறதே இது ஒன்று போதாதா ஆண்டு இறுதித் தீர்மானங்கள் அற்ப ஆயுள் கொண்டது என்பதற்கு! தீர்மானம் என்ற வார்த்தைக்கான எளிமையான விளக்கம் ஒன்றைச் செய்வேன் என்றோ அல்லது ஒன்றைச் செய்ய மாட்டேன் என்றோ திண்ணமாக முடிவெடுப்பது

இவ்வார்த்தையையும், இதன் நேரடிப் பொருளையும் தேவனைப் பின்பற்றுகிறவர்கள் அறிந்தும், புரிந்தும் வைத்திருக்க வேண்டியது வேதத்தின் போதனை. ஆம், அது அப்படித்தான் என்பதை யோசுவா 24:15 ம் வசனத்தின் மூலமாக நாம் தெரிந்து கொள்ள முடியும். கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக்குக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான். இதன் மூலம் இஸ்ரவேலர்கள் தீர்மானம் எடுக்கும்படி யோசுவா நெருக்குகிறார்.

யோசுவாவின் வார்த்தைகள் தரும் பொருளோடு கிட்டதட்ட ஒத்துப்போகும் வார்த்தைகளை அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் வெளிப்படுத்தியுள்ளார். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே! கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிபட்ட வர்களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களா! என்று (Iகொரி 15:58) யோசுவா மற்றும் பவுலடியாரின் வார்த்தைகளில் தீர்மானம் என்ற வார்த்தை நேரடியாக இல்லை. ஆயினும், அவ்வார்த்தைக்கான பொருள் இவ்வசனங்களில் இல்லாமலுமில்லை. அப்படித்தானே!

அணீயா பிராந்தியத்தின் தலைநகரமாகவும், விக்கிரகங்கள் கோலோச்சிய பட்டணமாகவும், தரை மார்க்கமும், தண்ணீர் மார்க்கமும் ஒருங்கிணைந்த வியாபாரக் கேந்திரமாகவும், ஒழுக்கக்கேட்டின் உச்சத்தை வருடிக் கொண்டிருந்ததால் கலாச்சாரச் சீரழிவின் சின்னமாகவும் திகழ்ந்த கொரிந்து பட்டணத்தில் பவுலடியார் தன்னுடைய

சாதுரியமான ஊழியத்தால் கர்த்தருடைய சபையைநிறுவினார் ( அப் – 18:1–17) பெரும் பாடுபட்டு அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியிருந்தாலும், அவர்களைக் கிறிஸ்தவ நெறிகளில் நிலைத்திருக்கச் செய்வதில் பெரிதாக வெற்றி பெற முடியவில்லை. கொரிந்துவுக்கே உரிய பல பழைய பழக்கங்களிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை. ஆகவே, அவர்களைக் கண்டித்து உணர்த்தும்படியாகவும் கிறிஸ்தவ நெறிகளைப் பற்றிய புத்திமதிகளைக் கொடுக்கும்படியாகவும் எழுதப்பட்டதுதான் முதலாம் கொரிந்தியர் நிருபம்.

பதினாறு அதிகாரங்களைக் கொண்ட இந்நூலின் பதினைந்தாம் அதிகாரத்தில் வரும் கடைசி வசனம் தான் நம் தலைப்புக்கான வசனம்.இப்பதினைந்தாம் அதிகாரம் உயிர்தெழுந்த இயேசுவின் தரிசனம் பற்றிப் பேசுவதோடு மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றிய பல உண்மைகளையும் வெளிப்படுத்துகிறது. அப்படிப்பேசும் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில், ( 15:50–57) கடைசி எக்காளம் தொனிக்கும் போது, உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களின் சரீரத்தில் ஏற்படும். மகிமையான மாற்றம் குறித்து விவரிக்கிறார். அப்போது மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம் என்று( 51,52)

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மகிமையான சரீர, மாற்றத்தையும், மகிமையான நித்திய வாழ்வையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வாழ்க்கை. அந்த வாழ்க்கைக்கு பவுலடியார் ஆவியானவரின் ஏவுதலால் என்ன அறிவுரை கூறியிருக்கிறார் என்பதில் கவனம் செலுத்தி, அவ்வாழ்க்கையை நாமும் ஒரு நாளில் பெற்றுக் கொள்ள எதிர்வரும் புதிய ஆண்டில் நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டுமென்று இப்பொழுது பார்ப்போம்.

*I. உறுதிபட்டவர்களாயிருக்க தீர்மானிப்போம்:*

மகிமையான சரீர மாற்றத்திற்கும், மகிமையான நித்திய வாழ்விற்கும் தகுதியுள்ளவர்களாவதற்கு எதிர்வரும் புதிய ஆண்டில் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் விசுவாசத்தில் உறுதியாயிருக்கத் தீர்மானிப்பது. உறுதி என்றால் நிலைத்த தன்மை. உறுதியாயிருப்பது என்பதன் பொருள் நிலையாகத் தரித்திருப்பது. இந்நிலைத்ததன்மை குறித்து பவுலடியார் கொலோசெயருக்கு எழுதும்போது வலியுறுத்தியுள்ளார். ‘‘நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல்,

ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்'' என்று (கொலோ 1:22) ஏற்றுக் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருப்பது அவசியம். எதற்கு அவசியம்? நற்செய்தியின் நாயகராகிய இயேசுவுக்கு முன் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் நிறுத்தப்படும்படிக்கு.

ஆயினும், நற்செய்தியின் உபதேசத்தை ஏற்றுக்கொண்ட எல்லாரும் அதில் அப்படியே நிலைத்திருப்பதில்லை. இமனே, அலெக்சந்தர் போன்ற தனி மனிதர்களும், (1தீமோத்1:20) கொரிந்து, கலாத்தியா போன்ற சபைகளும் தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதேவிதமாகத் தங்களைத் தள்ளாட்டத்திற்கு உட்படுத்தின எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு எபிரெயர் ஆசிரியர் எழுதும் போது, நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம் என்கிறார். அதாவது,கிறிஸ்து வினிடத்தில் உனக்குப் பங்கு வேண்டுமா? கிறிஸ்வுக்கு முன்பாக பரிசுத்தமான நிலையில் நிறுத்தப்பட வேண்டுமா? அப்படியானால் விசுவாசத்தில் நிலைத்திரு. கொலோசெயருக்கும், எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட அதே போதனை தான் கிறிஸ்துவின் உபதேச நெறிகளிலிருந்து விழுந்து போயிருந்த கொரிந்தியருக்கும் கொடுக்கப்பட்டது.

அப்படியானால், அருமையானவர்களே! விசுவாசத்தில் நிலைத்திருக்கிற காரியத்தில் நாம் எந்த நிலைமையில் உள்ளோம்? எதிர்வரும் புதிய ஆண்டில் எப்படி இருக்கப் போகிறோம்? ஒருவேளை, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி கிறிஸ்துவுக்குள் வந்து வாழ்ந்து கொண்டிருப்ப வர்களாக இருப்போமானால் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டியது கட்டாயம். ஏனெனில், ஒரு தரம் பிரகாசிப் பிக்கப்பட்டும் பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல் வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் மனந்திரும்புகிறதற்கேதுவாய், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் (எபி 5:4-6).

நாம் விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்குச் சவாலாக மனிதருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள

போதகமும் (எபே 4:14) வந்து சேரும். அப்பொழுது நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படியாக பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் (I பேதுரு 5:9) முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்(மத்தேயு 5:22) என்னும் இயேசுவின் கூற்று நம் காதுகளில் எதிர் வரும் புதிய ஆண்டில் ஒவ்வொரு நொடியிலும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

## II. ***அசையாதவர்களாயிருக்கத் தீர்மானிப்போம்***

மகிமையான சரீர மாற்றத்திற்கும், மகிமையான நித்திய வாழ்வுக்கும் தகுதியானவர்களாக எதிர் வரும் புதிய ஆண்டில் நாம் செய்ய வேண்டிய இரண்டாம் காரியம் விசுவாசத்தில் அசையாமலிருக்கத் தீர்மானிப்பது.

உறுதியாயிருப்பதும், அசையாதிருப்பதும் சற்றேறக் குறைய ஒன்று தான். ஆயினும், கொஞ்சம் வேறுபாடு இருக்க வேண்டும். அப்படி இல்லாதிருந்தால் இரண்டு வேறுபட்ட வார்த்தையை பயன்படுத்தும்படி ஆவியானவர் அனுமதித்திருக்கமாட்டார். அப்படியானால், அந்த வேறுபாடு என்ன? அதாவது, தன்னுடைய உன்னத நோக்கத்திலிருந்து தடம் புரளுவதற்கான தாக்குதல்கள் வந்தாலும் ஈடு கொடுத்துத் தாக்குப் பிடிப்பதுதான் அசையாமலிருப்பது.

இப்பொருளின் அடிப்படையில்தான் பவுலடியார் கலாத்தியரைப் பார்த்து இப்படியாகக் கேட்கிறார். ‘‘புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?’’ என்று. அதாவது, வெளியிலிருந்து வந்த தாக்குதலுக்கு அசைந்து கொடுத்து விட்டீர்களே என்று அங்கலாய்க்கிறார். ஆக, உறுதி என்பது, தான் ஏற்றுக் கொண்டதில் தன்னளவில் உண்மையாயும், நிலைத்த தன்மையோடும் இருப்பது. அசையாமல் என்பது வெளியிலிருந்து கள்ளப்போதகர்களால் வரும் அச்சுறுத்தல்களுக்கும், பிசாசின் தந்திரங்களுக்கும் ஈடு கொடுத்துத் தாக்குப்பிடிப்பது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் சவாலான கட்டங்கள் பக்தி வாழ்வில் வரும் என்பதை ஆவியானவர் அறிந்திருந்தார். ஆகவேதான்,எபேசு பட்டணத்து சபையாருக்கு பவுலடியாரைக் கொண்டு இவ்விதமாகப் புத்தி சொல்லி எச்சரித்தார். நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில்

இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடு இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள் என்றார்[அப்போ 20:29-31] இது குறித்து இயேசு ஆண்டவர் தனது புகழ் பெற்ற மலைப்பிரசங்கத்தில், கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை யாயிருங்கள்: அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்: உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் என்றார்[மத் 7:15] இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள்தான் கிறிஸ்துவின் உபதேசப்படியான மெய் வாழ்வு தகர்ந்து தரைமட்டமாகும்படி வேட்டு வைப்பவர்கள்.

இப்படிப்பட்டவர்களைக் குறித்துப் பேதுரு ஆசிரியர் எழுதும் போது, கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுகேதுவான வேதபுரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக்கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்: அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் என்றார் II[பேதுரு 2:1,2]. பேதுரு அப்போஸ்தலன் கூறுவது போல கேட்டுக்கேது வானவைகளைத் தந்திரமாய் கிறிஸ்தவத்துக்குள் நுழைந்து இப்போது தலை விரித்தாடுகிறது. எங்கள் ஊரில் உள்ள ஒரு சபைப் பிரிவில் பண்டிகைக் கொண்டாட்டத்துக்கான ஓர் ஆடல், பாடல் நிகழ்ச்சியில் இப்படியொரு பாட்டு வரிகள். மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், எல்லாம் ஆட்டம் இயேசுவுக்கே என்று.இளம்பிள்ளைகளை ஆடவிட்டிருக்கிறார்கள். கரகாட்டத்தை ஏன் விட்டு விட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட அக்கப்போர்கள் புரியாமலிருப்பதே நல்லது தான்.இப்படிப்பட்ட, மனசும், மாம்சமும் விரும்புகிற காரியங்கள் அநேகருடைய விசுவாசத்தை அசைத்து விடுகிறது. ஆகவே தான். பவுலடியார் கொரிந்தியருக்கு நீங்கள் எதிர்கால நித்திய மகிமையை மனதில் கொண்டு விசுவாசத்தில் அசையாமல் இருக்கவேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்.

அன்பானவர்களே! எதிர்வரும் புதிய ஆண்டில் அசைந்தும், வளைந்தும் கொடுக்காத ஒரு பக்தி வாழ்வை நடத்த நாம் ஆயத்தமாகிவிட்டோமா? இயேசு கிறிஸ்துவின் அருளால் கொடுக்கப்பட்ட சுவிசேஷம் ஒன்று தான். **வேறொரு சுவிசேஷம் இல்லை** (கலா 1:7) முதல் நூற்றாண்டிலும் இல்லை, இப்பொழுதும் இல்லை, எப்பொழுதும் இல்லை. அந்த சுவிசேஷத்தின் உபதேசத்திற்கு நாம் நம்மைச் சமூலமாக ஒப்புக்கொடுப்பது நல்லது. எச்சூழ்நிலையிலும் நாம் அசைந்து கொடுக்காமலிருக்கத் தீர்மானிப்போம்.

## III. *கர்த்தரின் கிரியையில் பெருகத் தீர்மானிப்போம்*

மகிமையான சரீர மாற்றத்திற்கும், மகிமையான நித்திய வாழ்விற்கும் தகுதியுள்ளவர்களாவதற்கு எதிர் வரும் புதிய ஆண்டில் நாம் செய்ய வேண்டிய மூன்றாவது காரியம் கர்த்தருக்கடுத்த கிரியையில் பெருகத் தீர்மானிப்பது.கிரியை என்றால் வேலை. எல்லோரும் நம்முடைய பிழைப்புக்கு ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டுள்ளோம். பவுலடியார் அப்படிப்பட்ட வேலையைக் குறித்து இங்கே பேசவில்லை.மாறாக,**கர்த்தருடைய கிரியை** என்று குறிப்பிடுகிறார். அதாவது,அவருக்காகச் செய்ய வேண்டுமென்று தேவனால் நியமிக்கப்பட்டுள்ள கிரியைகள். அப்படிப்பட்ட கிரியைகளில் நாம் பெருக வேண்டுமென்று கூறுகிறார். அதுவும் **எப்பொழுதும்** பெருக வேண்டுமாம். கர்த்தருக்கடுத்த கிரியைகள் **விழாக்காலப் பேருந்து** போல ஒரு சிலநாட்களுக்கு வருவதும் பிறகு நிற்பதுமாக இருக்கக்கூடாது.

கர்த்தருடைய பேரால் ஏதாவது ஒரு கிரியை அல்லது சில கிரியைகள், அதுவும் குறிப்பாகச் சிறப்பு நாட்களில் செய்தால் போதும் என்று நினைக்கிற கிறிஸ்தவ சமுதாயம் தாங்கள் இப்படிச் செய்கின்ற கிரியைகள் **கர்த்தருக்கேற்ற** கிரியைகளா என்று ஒருபோதும் சிந்திப்பதில்லை. ஆனால், நாம் நற்கிரியைகளைச் செய்யப்பக்தி வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கும்படியாகத் தான் இயேசு தம்மை ஒப்புக் கொடுத்தார்.(தீத்து 2:14). நன்றாக தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய வைராக்கியம் துர்க்கிரியைகளுக்காக இருக்க கூடாது. கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டு வசனங்களில் சொல்லப்படாத, அனுமதிக்கப்படாத எல்லாமே துர்க்கிரியைகள் தான்.

நற்கிரியைகளில் பெருக வேண்டுமென்று தேவன் சொல்லுகிறார். பரலோக தேவன் விரும்புகிறவைகளில் ஒன்று பெருக்கம் ஆதியிலே ஆதாமையும், ஏவாளையும் படைத்த தேவன் பலுகிப் பெருகுங்கள் என்ற கட்டளை கொடுத்தார். நம் பரலோக தேவன் பெருக்கத்தின் தேவன். இயேசு ஆண்டவர் தாலந்து உவமையில், இரண்டு தாலந்து பெற்றவனையும், ஐந்து தாலந்து பெற்றவனையும் மெச்சி நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்றார். ஒரு தாலந்து பெற்று அதைப் பெருக்காமல் மண்ணில் போட்டு புதைத்து வைத்தவனைப் பார்த்து பொல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனே என்று கடிந்து கொண்டார்.(மத் 25:15-26) இதில் அடங்கியுள்ள உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்பானவர்களே, நீங்கள் இங்கே ஒரு கேள்வி கேட்கலாம். பக்தி வாழ்வுக்கு இவ்வளவு சிரத்தை கொண்ட செயல்பாடு அவசியமா? அப்படிச் செய்வதால் கிடைக்கும் பலன் தான் என்ன என்று. நாம் இப்படியெல்லாம் கவுட்டி கவுட்டியாகச் சிந்திப்போம் என்று தெரிந்துதான் வசனத்தை இப்படியாக ஆரம்பித்துள்ளார். "ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து..."என்று. பிரயாசைகளுக்கு பலன் அளிக்கிறவர் நம் கர்த்தர். சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீருக்குக் கூட பலன் உண்டு என்று தானே வாசிக்கிறோம். [மத்தேயு 10:42] அப்படியானால், கர்த்தருக்காகப் படும் பிரயாசைகளுக்கு பலன் கிடைக்காதா?. இப்பேருண்மையைத்தான் பதினைந்தாம் அதிகாரத்தில் தர்க்கரீதியாக விவரித்து பிறகு, இங்கே படுகிற பிரயாசைகளுக்கு பலன் உண்டு என்று கூறுகிறார். ஆகையால், நிச்சயமாகவே பலன் உண்டு. யாருக்கும் எவ்வித சந்தேகமும்,எந்நிலையிலும் தேவை இல்லை.

ஆகவே, இந்த ஆண்டின் இறுதியில், தேவன் கொடுக்கும் ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்து, பக்தி வாழ்க்கையில் புத்தி தெளிந்து, நற்கிரியைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்படியாகத் தீர்மானம் எடுத்து பிரயாசைகளுக்கான பலனை பரத்திலிருந்து பெற்று எதிர்வரும் புதிய ஆண்டில், சரீர வாழ்விலும், ஆன்ம வாழ்விலும் வளமும், நலமும் சமாதானமும் பெற்று வாழ்வோமாக!

**அடியேனின் குடும்பத்தின் சார்பாகவும் திருமறை ஆசான் மற்றும் திருமறை தியானம் அலுவலகம் சார்பாகவும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

# தெய்வீக சுகமளித்தல்

Bro. J.C. சோட்

அற்புத சுகமளித்தல் என்பது சில மக்களின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அற்புத அடையாளங்களைச் செய்யக் கூடியவாறு, பரிசுத்த ஆவியின் வல்லமையை இன்றும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

இவ்வாறான வழியில் தேவன் இன்று செயல் படுவதில்லை என்று மறுக்கும் போது, ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. நீங்கள் தெய்வீக சுகமளிப்பை நம்புகிறீர்கள் அல்லவா? என்று. இந்தக் கேள்விக்கு என்னுடைய பதில் இதுதான்; நான் தெய்வீக சுகமளித்தலை நம்புகிறேன்; ஆனால், அற்புதசுகத்தை அல்ல. அப்படியானால் அவற்றிற்கு என்ன வித்தியாசம்? என்று நீங்கள் கேட்கக்கூடும். சகல சுகம் பெறுதலும் தெய்வீகமானது தான்: ஆனால், அற்புத சுகம் பெறுதல் இன்று நடைபெறுவதில்லை.

அற்புதங்களால் மட்டுமே தேவன் செயல்பட முடியும் என நாம் நினைப்போமானால், நாம் தவறு செய்கிறோம். கடந்த காலத்தில், பல வேளைகளில் அற்புதங்கள் வழியாக அவர் செயல்பட்டார் என்பது உண்மையே. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மேல் இந்தக் காரணத்திற்காகவே அனுப்பப்பட்டார்.

பின்னர், அப்போஸ்தலர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட சிலர் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறத்தக்கதாக அவர்களின் மேல் கைகளை வைத்தனர். ஆனால், புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கொடுக்கப்பட்ட பின் அற்புத யுகம் முடிந்து போயிற்று.

அற்புத யுகத்தின் சமயங்களிலும் கூட, அற்புதங்கள் குறைவாகவும் அதிக இடைவெளிகளிலும் நடைபெற்றன. அப்போஸ்தலர்களும் அவர்கள் மூலமாய் கைகளை வைத்துப் பெற்றுக்கொண்டவர்களும், சில இடங்களில் மட்டுமே இருக்க முடிந்தது. எனவே, மற்ற எல்லாரும் அற்புத காரியங்களை செய்யக்கூடாதவர்களாக இருந்தனர். ஆகவே மக்கள் அனைவரும் தெய்வீக சுகமளித்தலைச்

சார்ந்திருக்கவும், இயற்கையின் விதிகளுக்குட்பட்ட காரியங்களைச் செய்யவும் வேண்டியதாயிற்று.

தெய்வீக சுகமளித்தல் என்பது தேவனால் சுகப் படுத்தப்படுவது: ஆம் இயற்கையின் வழியாக தேவன் கொடுப்பதாகும். தேவன் உலகத்தையும் அதிலுள்ள சகல வற்றையும் படைத்தார். மூலிகைகள், மருந்துகள் அனைத்தையும் படைத்தவர் அவரே, அவர் நம்மை உண்டாக்கினார். எனவே, மருத்துவர்களையும், செவிலியர் களையும் படைத்தார். நோயாளிகளுக்காக மருத்துவ மனைகளும் இதர எல்லா வசதிகளும் அவர் மூலமாக உண்டாக்கப்பட்டுள்ளன. மாம்சமான சரீரத்தைப் பற்றியும் அதின் தேவைகளைப் பற்றியும், ஆணும், பெண்ணும் கற்றுத் தெரிந்து கொள்ள அவருடைய ஆசீர் வாதங்கள் மூலமாக அவர் அனுமதித்துள்ளார். மருத்துவத்தையும் மருந்துகளையும் கற்றுக்கொள்ளவும், நோயாளிகள் சுகம் அடையத்தக்கதான மருந்துகளை அவர்களுக்கு அளிக்கவும்ய அவர் மேலுமாக அனுமதித்துள்ளார். அப்படியானால், மனிதனை சுகப் படுத்துவதில் தேவன் ஈடுபட்டுள்ளார் என நாம் கூறலாமா? மிக நிச்சயமாகக் கூறலாம். அதுவே உண்மை.

சுகமுள்ளவர்களுக்கு அல்ல, பிணியாளிகளுக்கே வைத்தியர் தேவை என்று இயேசு கூறினார் [ மத்தேயு 9:12] லூக்கா, அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய நூல்களின் ஆசிரியரான லூக்கா,''ஒரு பிரியமான வைத்தியர்''என அழைக்கப்பட்டார். [ கொலோ 4:14] எருசலேமிலிருந்து எரி கோவுக்கு சென்ற போது வழியிலே கள்ளர் கையில் அகப் பட்டுக் குற்றுயிராக விடப்பட்ட ஒரு யூதனைப் பற்றி இயேசு சொன்னார். ஆன்மீகவாதிகளாக இருந்த ஒரு ஆசாரியனும், ஒரு லேவியனும் அந்த வழியே வந்து, அவனைக் கண்டும், விலகிப் போனார்கள், பின்னர், யூதர்களின் பாரம்பரிய எதிரியான ஒரு சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகி, அவனுடைய காயங்களுக்கு எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து, அவனை, ஒரு சத்திரத்திற்குக் கொண்டு போய், சத்திரத்தானிடம் கொஞ்சம் பணம் கொடுத்து அவனைக் கவனித்துக் கொள்ளும்படி கூறியதோடு, அதிகமாக அவனுக்கு ஏதாவது செல வழித்தால், தான் திரும்பி வரும் போது தருவதாகவும் கூறினான். ஏன் அவனுடைய காயங்களுக்கு எண்ணெயும், திராட்சரசமும் வார்த்தான்? ஏனெனில், காயங்களைச் சுகப்படுத்தும் மருந்துகளாக அவை பயன்பட்டன. அப்படியானால், அவனுடைய காயங்களை சுகப்படுத்து வதில் கர்த்தருக்கு எவ்வித

சம்பந்தமும் இல்லை என நீ கருதுகிறாயா? இறுதியாக, தீமோத்தேயுவிடம், நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள் என பவுல் அறிவுரை வழங்குகிற காலத்தில் அற்புதங்கள் நடை பெற்றுக் கொண்டு இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தீமோத்தேயுவை பவுல் அற்புதமாக ஏன் சுகமாக்கவில்லை? நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கை வைத்தார்களோ அவர்களும், சகல நோயாளிகளையும், ஊனமுற்றவர்களையும் சுகப்படுத்தினார்கள். ஆனால், மக்களை சுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே அற்புதங்கள் நடைபெறவில்லை. சிலர் சுகமாக்கப் பட்டனர். சுகம் பெற்றவர்கள் அதனால் பயன் பெற்றார்கள். ஆகவே உண்மையில் அப்போஸ்தலர் நடபடிகள் 8-ம் அதிகாரத்தில் நாம் படித்தபடி, விசுவாசிகளை ஏற்படுத்தவும், வசனத்தை உறுதிபடுத்தவும் [மாற்கு 16:20] அற்புதங்கள் நடத்தப்பட்டன. ஆனால், வசனம் ஏற்கனவே உறுதிப்படுத்தபட்டிருந்தாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது விசுவாசம் உண்டாகிறது என்பதாலும் [ரோமர் 10:17] இனி அற்புதங்கள் தேவையில்லை. இன்று எதற்காக அற்புதங்கள் நடைபெற வேண்டும்?

அடுத்து, ஜெபம் இக்கருத்திற்கு எப்படிப் பொருந்துகிறதாக உள்ளது? நாம் வியாதியஸ்தர் களுக்காவும், நமது தேவைகளுக்காகவும், ஓர் அற்புதத்தை எதிர்பார்த்துத் தான் ஜெபிக்கிறோமா? இன்றைக்கு அற்புதங்கள் நடை பெறுவதில்லையென்று சொன்னால், ஜெபத்தின் நோக்கம் என்ன? ஜெபத்தில், எங்களுக்கு முழு நம்பிக்கையுண்டு என்று இங்கே அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறோம். ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவை களுக்குக் பதிலளிக்கிறார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இதை அவர் எப்படிச் செய்கிறார்? ஓர் அற்புதத்தைச் செய்வதின் மூலம் தான் பதிலளிக்க வேண்டுமா? சரி, ஒரு தகப்பன் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட நிலை என்ன? பிள்ளைகள் தகப்பனிடம் எதையாகிலும் கேட்கும்போது அதை தகப்பன் அற்புதத்தின் மூலம் தான் நிறைவேற்றுகிறாரா? இப்படி நிறைவேற்றுவதில்லை என்று நமக்குத் தெரியும் அப்படி யானால் அவர்களின் தேவைகளை எப்படி நிறை வேற்றுகிறார்? அவர் தனக்களிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கொண்டுசெய்கிறார். மேலும், பிள்ளைகளின், நன்மைக்

கேற்றவை களையே நிறைவேற்றுகிறார். தனக்கு இயலாதவைகளை அவர்கள் கேட்கும் போதோ அல்லது அவர்களுக்கு அவசியமில்லாததை அவர்கள் கேட்கும் போதோ அதை தகப்பன் கொடுப்ப தில்லை. தேவனுடைய காரியத்திற்கும் இவ்வுண்மை பொருந்தும். அவர் நமது தகப்பனாகவும், நாம் அவருடைய பிள்ளைகளாகவும் இருக்கிறோம். நம்மை அவர் நேசிக்கிறார் நாம் கேட்ப வற்றைக் கொடுக்க விரும்புகிறார். அதே சமயத்தில், நமக்கு எது தேவையில்லை என்பதும் அவருக்குத் தெரியும். அது நமக்கு நல்லதல்ல வென்றால், அவர் அதை நமக்குத்தர மாட்டார். ஆனால், நமக்கு அது நல்லதாக இருந்து, அதை அவர் கொடுக்கச் சித்தமானால், நிச்சயமாக நமது ஜெபத்திற்குப்பதிலளித்து நமது வேண்டு கோளைநிறைவேற்றுவார்.

இயேசு சொன்னார் : கேளுங்கள்,அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள். அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்ட டைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாத வர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலி ருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளு கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம், அல்லவா? மத்தேயு? 7:7- 11 இப்போது, மீண்டுமாக, தமது பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்க கர்த்தர் ஓர் அற்புதத்தைச் செய்ய வேண்டுமா? நிச்சயமாக இல்லை.

நாம் நமது ஆகாரத்திற்காக ஜெபிக்கிறோம். ஆனால், தேவன் நமக்கு நல்ல சுகத்தை தந்து உணவைத் தேடு வதற்கான வழியையும் காட்டுகிறார். உணவை உண்டாக்கி நமது கைகளில் தேவன் அவற்றைப் படைக்கலாம். ஆனால், அப்படிச் செய்வதை அவர் தேர்ந்தெடுக்கவில்லை. அல்லது அவ்வாறு செய்வதாக அவர் வாக்களிக்கவும் இல்லை; அப்படி செய்யப்போவதுமில்லை. நாமோ அல்லது நமது நண்பர்களோ நோயுற்றிருந்தால், சுகமடைய தேவனை நோக்கி ஜெபிக்கலாம். அற்புதத்தினால் நமக்கு அவர் சுகமளிக்க

இயலும்; என்றாலும் அவர் அப்படிச் செய்வதில்லை. செய்வதாக வாக்களிக்கவும் இல்லை; ஆனால் நாம் ஒரு மருத்துவரைப் பார்க்கவும், மருந்துகளை பெற்று அவற்றைச் சரியான முறையில் உட்கொள்ளவும், போதுமான ஓய்வு எடுத்துக்கொள்ளவும் நமக்கு அவர் அறிவைக் கொடுத் திருக்கிறார். இப்போது, நாம் அவ்விதமாகச் செய்து குண மடையும் போது, நம்மைக் குணப்படுத்தியது யார்? தேவன் நமது ஜெபத்தைக் கேட்டாரா இல்லையா? சொல்லுங்கள்.

நாம் கேட்பதற்கு முன்பாகவே நமது தேவைகளை தேவன் அறிகிறார் என கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார்.[ மத். 6:8]. பின்னர் யோவான் கூறுகிறார். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந் தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோ மென்றும் அறிந்திருக்கிறோம்.[யோவான் 5:14,15].

ஆம், தேவன் இன்றும் சுகமளிக்கிறார். ஆனால் அற்புத த்தினால் அல்ல அவருடைய வல்லமையை நிரூபிக்க எதையும் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. ஏற்கனவே, மீண்டும் மீண்டுமாக அவருடைய வல்லமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் விரும்புகிறதை இன்றும் அவர் செய்யஇயலும். ஆனாலும் அவருடைய வசனத்தில் அவர் வெளிப்படுத்தியிருப்பதைப் போல , இயற்கைக்குரிய, ஆவிக்குரிய சட்டங்களின் மூலமாக காரியங்களைச் செய்ய அவர் தேர்ந்தெடுத்துள்ளார். இயற்கைச் சட்டம் மனிதனுடைய சரீர தேவைகள் சம்பந்தப்பட்டது. ஆவிக்குரிய சட்டம் நற் செய்திக்குக் கீழ்ப்படிவதையும், பாவமன்னிப்புப் பெறு வதையும், நித்தியஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறுவதையும் சம்பந்தப்பட்டது.

தேவன், நமது வழியிலே செயல்பட வேண்டுமென்ற மிகப் பலவீனமான நமது விருப்பத்திற்குப் பதிலாக, அவர் தன்னுடைய வழியிலே காரியத்தை நடத்த, கர்த்தரிடம் நாம் போதுமான விசுவாசம் கொள்ளும் படியாய் தேவன் நமக்கு உதவுவாராக, ஒரு உண்மையென்னவெனில், நாம் நமது விருப்பத்தை தேவன் மீது திணிக்கமுடியாது. ஆகவே, அவருடைய சமூகத்தில் நம்மை முற்றிலுமாகத் தாழ்த்தி அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

பெண்கள் பகுதி

# தேவனுக்கு முதலிடம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். இவ்வருடம் முழுவதும் நமக்கு சுகம், பெலன், ஜீவனைக் கொடுத்து காத்து வந்த தயவிற்காக முதலாவது நன்றி சொல்வோம். வருடங்கள் கர்த்தரால் நமக்குக் கூட்டி கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர் காலங்களின் தேவன் ஆயிற்றே! எனவே நம் காலங்களும் அவருடைய கரத்தில் தான் உள்ளது. கர்த்தருடைய கரத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்ட ஈவுகள் ஏராளம். எவ்வளவோ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட நாம் தேவனுக்கென்று எதையாவது திரும்பக் கொடுக்கிறோமா?

மத்:6:33 ல் **முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட்டிக் கொடுக்கப்படும்.** என்று வாசிக்கிறோம். இது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம் வாய் திறந்து கூறின வார்த்தைகள். உணவு இல்லையே, உடை இல்லையே என்று கவலைப்படுகிறவர்களிடம் இந்த வார்த்தைகளைப் பேசுகிறார். இயேசு பேசினவைகள்யாவும் தன்னை அனுப்பின பிதாவின் வார்த்தைகள் வல்லமையுள்ள வார்த்தைகள். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியம் என்றால் என்ன? எவற்றிற்கெல்லமோ அர்த்தம் கண்டு கொள்ளும் நாம் இதை அப்படியே நமக்கு சம்பந்தமில்லாத ஒரு வார்த்தை என்று அசட்டை பண்ணிவிடுகிறோம். தேவனுடைய இராஜ்ஜியம் என்பது சபை. இயேசு கிறிஸ்து இரத்தத்தை சிந்தி சம்பாதித்தது சபை. இதைத்தான் நாம் முதலாவது தேட வேண்டும். நீதி என்பது அவருடைய வசனம் வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனங்கள். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் (சங் 119:172) சரி இதை நாம் எப்படி நம் வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்துவது?

மத் 6:33 ல் உள்ள தேவனுடைய ராஜ்ஜியத்தின் வரலாறு நம் ஒவ்வொருவருக்கம் தெரிந்திருக்க வேண்டும். பின்பு அதை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இதை வாசிக்கும் அநேகராகிய நாம் அதை கண்டுபிடித்து அந்த சபையில் அங்கமாக இருக்கிறோம். இரட்சிக்கப்படு கிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என்ற வசனத்தின்படி [ அப்:2:47] அங்கமானோம். இந்த மாபெரும் பாக்கியத்தைப் பெற்ற நாம் தேவனுக்கு எதை திரும்பக் கொடுத்திருக்கிறோம்? நம் முடைய நேரம், நம், பிள்ளைகள், குடும்பம், நம் வருமானம், நம் தாலந்து, நம் வாழ்க்கை இப்படி நிறையவற்றை நாம் தேவனுக்குச் செலுத்த கடமைப் பட்டுள்ளோம், கொடுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்று நமதாண்டவர் திருவுளம் பற்றியிருக்கிறார். பொய்யுரையாதவர். சிந்தித்துப் பார்ப்போம் எப்படியெல்லாம் நாம் அவருக்கு நம்முடையதை கொடுத்தி ருக்கிறோம் என்று. பக்தன் தாவீது சொல்லுகிறார்[ சங் 116:12,13] **கர்த்தா எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக் காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்** ஆம் நம்மைநாமே அவருக்கு அர்ப்பணித்து ஓயாமல் அவரைத் தொழுது கொள்வதுபுதிய ஏற்பாட்டிலே வாரத்தின் முதல் நாளிலே சபை கூடி வந்து அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறோம். நேரமாக சென்று சபையின் வேலைகளை பார்க்கிறோமா? சாமுவேல் பிள்ளை யாண்டனைக் போல் நம் பிள்ளைகள் சபையில் ஏதெனும் ஒரு பணி செய்யவேண்டும் என்று எண்ணி அவர்களை ஊக்குவிக்கிறோமா? நாம் பெற்றிருக்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் நாம் தேவனிடத்திலிருந்து பெற்றவைகளே. அவைகளை நாம் திரும்ப அவருக்கு கொடுத்தேயாக வேண்டும்.

அருமையானவர்களே! நாம் எவ்வளவு நேரம் தினமும் வேதம் வாசிக்கிறோம். ஆலோசனை புஸ்தகமாயிற்றே! பின் ஏன் எடுத்துப் பார்ப்பதேயில்லை? நம் பிள்ளைகள் வேத அறிவு பெற அனுமதிக்கிறோமா? தீமோத்தேயு விசுவாசத்தில்உத்தம குமாரனாயிருப்பதற்கும், பவுலோடு பயணங்கள் செய்யவும் உதவியாயிருந்தது பாட்டி லோவிசாளும், தாய் ஐனிக்கேயாளுந்தானே! [II தீமோ 1:5]. ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவைப் போன்று சொந்த வேலையும் செய்து கொண்டு ஊழியர்களை தாங்கி, உற்சாகப்படுத்தி ஆத்துமாக்களைத் தேடி ஆதாயம் செய்வோம்.[ அப் 18:26].

இவர்களைப்போன்று தான் நாமும் நமது பொன்னான நேரங்களைக் கர்த்தருக்காக செலவு செய்ய வேண்டும். மக்கதோனியா நாட்டு சபையின் விசுவாசிகள் கொடிய தரித்திரத்திலும் மிகுந்த உதாரத்துவமாய் (II கொரி 8:2) கொடுத்தார்கள். நாம் சுயநலவாதிகளாய் இருந்தால் கிறிஸ்துவின் சுவிசேஷம் எப்படி பெருகும், வளரும்? அனுப்பப்படாவிட்டால் யார் பிரசங்கிப்பார்கள்.?

தாய்மார்களே நம் கையில் தேவன் எதை எதிர்பார்க்கிறார் என்பதை சிரத்தையெடுத்து சிந்தித்து உட்கார்ந்து யோசித்துப் பார்த்து, உடனே செயல்படுவோம். வல்லமையும், மகத்துவமும் சகல அதிகாரமும் நிறைந்த தேவனையும், குமாரனையும், வசனங்களையும் அற்பமாய் எண்ணினோமானால் நம்மைவிட பரிதாபத்திற்குரியவர்கள் யாருமில்லை. சரீரத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, சுகபோகமாய் வாழ்வதற்குத்தான் தேவன் நம்மை இந்த உலகத்தில் பிறக்கச் செய்தார் என்று எண்ணி நாட்களைக் கழித்துக் கொண்டுள்ளோம். இல்லை பிரியமானவர்களே! தனியாகப் பிறந்தோம், தனியாக மரிக்கப் போகிறோம், தனியாக நியாயத்தீர்ப்பில் போய் நிற்கப் போகிறோம். எப்படி தேவனை சந்திக்கப் போகிறோம். அவர் எதிர்பார்ப்பு எதையுமே மதிக்காமல், கீழ்ப்படியாமல் நம் இஷ்டப்படி வாழ்ந்தால் முடிவு எப்படித்தான் இருக்கும்?

கிறிஸ்துவின் வசனம் தான் நம்மை நீயாயந்தீர்க்கும் (யோ:12:48). 2018 முடிய நம்மை பாதுகாத்து வழி நடத்தின தேவனுக்கு நன்றி சொல்லி 2019 ம் ஆண்டிலே **வேதம் சொல்லும் வாழ்க்கை** வாழ்வோம்நம்மேல் கரிசனையும், அன்பும் கொண்ட தேவன் பலபல விஷயங்களை சம்பவங்களை நமக்கு வேதத்தில் எழுதிக் கொடுத்துள்ளார். அனைத்து வினாக்களுக்கும் இப்புத்தகம் விடை சொல்லுகிறது. எனவே முதல் தேவனின் வார்த்தைக்கு இடம் கொடுப்போம் கர்த்தர் கூட்டிக் கொடுக்கும் இப்புதிய வருடத்திலே தேவன் தான் முதல் மீதி எல்லாமே இரண்டாம், மூன்றாமிடம் என்று இன்று ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்வோம். இந்த உலகம் நிலையல்ல, சதமல்ல. பரலோக நம்பிக்கை உள்ளவர்கள், அதை சுதந்தரிக்க ஆசைப்படுபவர்கள் உடனே முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேட தீர்மானம் எடுப்போம். பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென், ஆமென்.

வாலிபர் பகுதி

# எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு என் உள்ளப் பூர்வமான வாழ்த்துதல்களை உரித்தாக்குகிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே! இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக, பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ அல்லது தெரிந்தவர்களையோ நேரில் காணும்போதோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதோ நலம் விசாரிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பெரும்பாலும் நாம் உடல்நலம் பற்றித்தான் விசாரிக்கிறோம். மனநலம் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதர்கான அடையாளமோ அல்லது அளவு கோலோ அல்ல. இன்றைய நாட்களில் பலர் குடும்பச்சூழல் சுற்றுச் சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப் படுகிறார்கள். உடல்நலம் குன்றிவிட்டால் மருந்து மாத்திரைகள் என பல வழிகள் உண்டு. ஆனால், மன நலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன் வழியை வேதாகமத்தில் மாத்திரமே வைத்திருக்கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச்சிறந்த புத்தகம் வேதாகமம்தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் மனித இனத்துக்கான வழிகாட்டி புத்தகமாகத் திகழ்ந்து வருகிறது. அதுவும் குறிப்பாக, பிலிப்பியர் நிரூபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களைவிட மனித நலனுக்காக வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்நிருபத்தை தனக்குப் பொருளாதார நன்மைகளை கொடுத்தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்துவதற்காக எழுதினார் (பிலிப் 1:45;4:18). அச்சபையார் எப்பாப் பிரோதீத்து மூலமாக பொருளாதார உதவிகளை சிறையிலிருந்த பவுலுக்குக் கொடுத்தனுப்பினார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையைப்

பற்றிய கூடுதல் தகவல்களையும் கொண்டு வந்தார். அப் பட்டணத்து சபையார் பவுலின் சிறைவாசத்தைக் கேள்விபட்டுஅதிகமாகக் கவலைப்பட்டார்கள். பவுல் தனக்கு சம்பவித் தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று அவர்களுக்குத் தெரியப்படுத்தியதன்மூலமாகஅவர்களை ஆறுதல்படுத்தினார். மேலும், அவர்கள் தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்ய வேண்டிய காரியங்களை பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். அதிலிருந்து நாம் மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளலாம்.

**I. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும்**

இது மனரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லா விதத்திலும் நன்றியுள்ளவனாயிருக்க பல காரணங்கள் உண்டு. கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகங்கள் நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால், உலகக் கவலைகளும் மனச்சோர்வுகளும் கிறிஸ்தவர் களாகிய நம்முடைய மகிழ்ச்சியை மங்கச் செய்து விடுகின்றன. இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்ச கட்டத்திற்குப் போகும் போது மனோதத்துவ நிபுணர்கள் அவர்கள் சிரித்து மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் புதிதாக கண்டு பிடித்துவிட்டோம் என்று மெச்சிக் கொள்ள ஒன்றுமில்லை.

**II. நம் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரியவேண்டும்**

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்திரிப்பார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் நாம் மலைத்துப் போகத்தக்க நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி யிருக்கிறார். கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலைமையிலி ருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் (பிலிப்பியர் 4:11). நாம் எதற்கும் பதட்டப்படாமல், கோபப் படாமல், சாந்தமாக இருக்க வேண்டு மென்றுதான் மனோதத் துவ நிபுணர்களும் ஆலோசனைகளை வழங்கி

வருகிறார்கள். இதுவும் அதாவது இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்றுதான்.

### III. நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்

இது மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற்பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில் அழையா விருந்தாளியாக வந்து நம்மை அலைக்கழித்து, நம்மை நிலைகுலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையானவைகள் எவைகள் என்பது நம்மை விட தேவனுக்குத் தான் நன்றாகத் தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ்யத்தையும்,அவருடைய நீதியையும் தேடும் போது தேவைகளை தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் ( மத்தேயு 6: 25-34) தேவ காரியங்கள் என்று வரும்போது நாம் தேவ வசனங்களைத் தியானிக்கலாம்,நோயாளிகளைப் போய் சந்திக்கலாம். தேவையில் உள்ளவர்களுக்கு தேடிபோய் உதவி செய்யலாம். இவ்விதமாக பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும்போது, ஏதாவது ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளில் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேத வசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனைகளைத்தான் எதிரொலிக்கிறது.

### IV. நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பிரியமான வாலிபர்களே, நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் போது நம் நண்பர்களிடம் தெரியப் படுத்துகிறோம், நம் உறவினர்களிடம் தெரியப்படுத்து கிறோம். அதனால் பிரச்சனைகளுக்கு தீர்வு உண்டா வதில்லை, மாறாக, பிரச்சனை நீண்டு கொண்டே தான் போகிறது. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்க விளைவுகளை உண்டாக்குகிற தீர்வாகத்தான் இருக்கும். மனோதத்துவ ரீதியாக நம் கவலைகளை, பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கி வைக்காமல் பிறரிடம் பகிர்ந்து கொள்வது, தெரியப் படுத்துவது பாரத்தை குறைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், யாரிடம் தெரியப்படுத்துகிறோம் என்பது தான் முக்கியம். சில வேளைகளில், நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரியப்படுத்தும் போது அது மற்றுமொரு மிகப்பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்து

விடுகிறது. எனவே தான் நாம், ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும், அப்போது நல்ல தீர்வு கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் பாரம் இறங்கி விடுகிறது, குறைந்த பட்சம் குறைந்து விடுகிறது. பிரியமான வாலிபச்செல்வங்களே! இன்றை நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாகப்பேசப்படும் விசுயமாக இருக்கிறது. மனநலத்தை மேம்படுத்த, மொத்த சொத்தையும் வித்து, மனோதத்துவ நிபுணர்களை நோக்கி மக்கள் ஆட்டு மந்தைப் போல் படையெடுத்துச் செல்வது விந்தையாய் இருக்கிறது. ஆனால், மனநலத்திற்காக அதன் மேம்பாட்டிற்காக தேவன் நம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத்திருக்கிற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்பட்டு, நம் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரமும் தங்கு தடையின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எலாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிப்போம் (III யோவான் 2).

---

## வேதாகமத்தில் சில ஜெபங்கள்

1. அன்னாள் – ஒரு ஆண் பிள்ளைக்காக [I சாமுவேல் 1– 11]
2. தானியேல் – ஜெபிக்க தடை வந்த போது [தானியேல் 6:7,10,11]
3. எலியா – மழை பெய்யும் படி ஜெபம் பண்ணினார் [I ராஜா 17,18]
4. யோசுவா – ஜெபித்து சூரியனையும், சந்திரனையும் நிறுத்தினார் [யோசு 10:12–14]
5. எஸ்தர் – தன் ஜனம் மரணத்திலிருந்து விடுதலை அடைய [எஸ்தர் 4:13–16]
6. சாமுவேல் – இடி முழக்கத்தோடு மழை பெய்யும்படி [I சாமுவேல்10:16–18]
7. மோசே – ஜனத்தை அழிக்காதிருக்க [உபாகமம் 9:25-29]

சிறுவர் பகுதி

# நன்றிச் செலுத்துங்கள்!

**சகோ. ஏபில் நாயகம்**

**எ**னக்குப் பிரியமான சிறு தம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் இவ்விதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்: அனைவரும் உங்கள் அரையாண்டு விடுமுறையை மகிழ்ச்சியேபடு கழித்துக் கொண்டிருப்பீர்கள். அப்படித்தானே? அது மட்டுமல்ல, புது வருடத்திற்குள் பிரவேசிக்கவும் ஆவலாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் இருக்கிற நாம், நன்றியுள்ள இருதயத்தோடு இருக்க வேண்டும். நாம் ஒவ்வொரு நாளையும் கடந்து வந்தது தேவனுடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், தயவினாலும் தான் அப்படியானால், இந்த வருடத்தில் நாம் கடந்து வந்த அனைத்து நாட்களுக்காகவும் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்? ஆம் பிள்ளைகளே, இந்த வருடத்தைக் கடந்து புது வருடத்திற்குள் செல்லப் போகிறோம் என்ற சந்தோஷமும் மகிழ்ச்சியும் ஒரு பக்கம் இருந்தாலும், ஒரு வருடம் முழுவதும் நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளை நினைத்து நம் தேவனுக்கு நன்றி சொல்லநாம் மறந்து விட கூடாது.

லூக். :17:11–19 ல், ஒரு சம்பவத்தை வாசிக்கிறோம். இயேசுவிடம் சுகம் பெறுவதற்காக பத்து குஷ்டரோகிகள் வந்தார்கள். வந்த பத்து குஷ்டரோகிகளையும் இயேசு சுகமாக்கினார். சுகம் பெற்ற பத்துப் பேர்களில் ஒருவன் மட்டுமே இயேசுவிடம் திரும்ப வந்து நன்றி செலுத்தினான். அது மட்டுமல்ல உரத்த சத்தத்தோடு தேவனை மகிமைப்படுத்தினான். அந்த குஷ்டரோகியிடம் இயேசு மற்ற ஒன்பது பேர் எங்கே என்று கேட்டார். அதன் அர்த்தம் அவர்களும் நன்றியோடு தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஆம் பிள்ளைகளே! தேவன் அதை நம்மிடமும் எதிர் பார்க்கிறார். நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோமா? இந்த வருடம் முழுவதும் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக நாம் நன்றியாய் இருக்கப் போகிறோமா? அல்லது சுகம் பெற்று திரும்பி வந்து தேவனுக்கு நன்றி செலுத்தாத ஒன்பது குஷ்டரோகிகளைப் போல் இருக்கப் போகிறோமா? கர்த்தரைத் துதித்து அவருக்கு ஸ்தோத்திரங்களை சொல்லுவோம், சரியா? அப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு,

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஜனவரி மாத இதழில்)**

## நியாயாதிபதிகள் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் (4-10 அதிகாரங்கள்)

1] யாபீன் ராஜா எந்தப்பட்டணத்தில் குடியிருந்தான்?

2] இஸ்ரவேலை நியாயம் விசாரித்த பெண் தீர்க்கதரிசியின் பெயர் என்ன?

3] போர்க்களத்தில் தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றவர்கள் யார்?

4] ஸ்திரீகளுக்குள் யார் ஆசீர்வதிக்கப்பட்டவர்?

5] கர்த்தர் இஸ்ரவேலரை எத்தனை வருடங்கள் மீதியானியரிடம் ஒப்புக்கொடுத்தார்?

6] கிதியோனைப் பார்த்து கர்த்தருடைய தூதனானவர் சொன்னது என்ன?

7] கிதியோன் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு என்ன பெயர் வைத்தார்?

8] கிதியோன் எங்கே அடக்கம்பண்ணப்பட்டான்?

9] யாவீர் இஸ்ரவேலை எத்தனை வருடங்கள் நியாயம் விசாரித்தான்?

10] அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி, எங்கே பாளையமிறங்கினார்கள்?

## நவம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. கானானியரை எதிர்த்து யுத்தம் பண்ணுவது (நியா:1:1)
2. யூதா, சிமியோன்( நியா:2:3)
3. இஸ்ரவேல் நடுவே குடியிருந்து நெருக்கினார்கள்( நியா:1:29), அவர்கள் தேவர்கள் கண்ணியானவர்கள் (நியா:2:3)
4. கர்த்தரை விட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்( நியா:2:13)
5. கொள்ளைக்காரர் கையில் ஒப்புகொடுத்து பகைஞர் கையில் விற்றுப்போட்டார்கள் (நியா:2:14)
6. இஸ்ரவேலை கொள்ளையிடுகிற இவர்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க (நியா:2:16)
7. அவர்களுடைய குமாரத்திகளை விவாகம் பண்ணி தங்களுடைய குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடுத்து அவர்கள் தேவர்களைச் சேவித்தார்கள் (நியா:3:5,6)
8. ஒத்னியேல் என்னும் ரட்சகனை (நியா:3:9)
9. 80 வருஷம் (நியா:3:30)
10. ஆனாத் (நியா:3:31)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| 1. இந்திரா ஜெபக்கனி | - | நாசரேத் |
| 2. ஜெபதாய் | - | நாசரேத் |
| 3. M. செல்வம் | - | வெள்ளலூர் |
| 4. பாக்கிய சம்பூர்ணம் | - | ஈரோடு |
| 5. K.S. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| 6. Mrs.ஃப்ளோரா சம்மா | - | திருப்பத்தூர் |
| 7. Mrs. மேரி ஜெபராஜ் | - | வேளச்சேரி |
| 8. C. ஆனந்தராஜ் | - | சென்னை |
| 9. செல்வமணி குணசேகரன் | - | சென்னை |
| 10. G. சாமுவேல் மோகன்தாஸ் | - | சென்னை |
| 11. தர்மராஜ் | - | புதுக்கடை |
| 12. C. ஆகாஷ் | - | வேலூர் |
| 13. P. ஜெயஷீலா | - | காரைக்கால் |
| 14. V. ஜான் வெஸ்லி | - | கோவை |
| 15. R. மோகன் ராஜ் | - | கரூர் |
| 16. S. சௌந்தர்ராஜன் | - | அரூர் |
| 17. Mrs. பாக்கிய செல்வி | - | திண்டுக்கல் |
| 18. அன்புமணி | - | கன்னியாகுமரி |
| 19. பிரியா | - | சேலம் |
| 20. O. ஜேக்கப் | - | நீலகிரி |
| 21. பன்னீர்செல்வம் | - | அரூர் |
| 22. தேனப்பன் | - | மேட்டுப்பாளையம் |
| 23. அருள்தாஸ் | - | திருப்பூர் |
| 24. ஜெபா | - | அரூர் |
| 25. அருணா | - | சேலம் |
| 26. மேரி | - | திருவாரூர் |
| 27. பெனிட்டா | - | மதுரை |
| 28. செல்வன் | - | சென்னை |

# சாவை விரும்பியவர்கள்

**Bro. பாண்டியன்**

**வா**ழ்க்கையில் நாம் பல விரும்பத்தகாத நிகழ்வுகளை, உறவுகளைச் சந்திக்க நேரிடுகிறது. சில சூழ்நிலைகள் நம்மைத் தொடர்ந்து பெலவீனப்படுத்தி நம் மகிழ்ச்சியை அழித்துப் போடுகிறது. அப்படிப்பட்ட மோசமான மனச் சோர்வுகள் நேரிடும் போது சிலர் **செத்துப்போனால் நன்றாயிருக்கும்** என்று மதியீனமாக யோசிக்கிறார்கள். நம் எதிரிகள் அல்லது நம்மைப் பிடிக்காதவர்கள் ஒரு வேளை நாம் மரிப்பதை விரும்பலாம். ஆம் அப்படியும் சிலர் இருப்பார்கள் . ஆனால், நம்மை உண்டாக்கிய நம் தகப்பனாகிய தேவன் அப்படியல்ல. **மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் சாகிறவனுடைய சாவை நான் விரும்புவதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**[எசேக் 18:32] இருந்தாலும் மாம்ச பெலவீனத்தில் மனிதன் அப்படிப்பட்டச் சோர்வுகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. அதனால் தான் நாம் நம் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவைப் பின்பற்றி வர பணித்திருக்கிறோம்.

அற்புதமாக விடுதலையாக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனம் சீன் வனாந்திரம் சேர்ந்த போது தேவனைத் தொடர்ந்து விசுவாசியாமல் உணவு இல்லாததற்காக மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, எகிப்திலேயே **நாங்கள் செத்துப் போயிருந்தால் நலமாயிருக்கும்** என முறையிட்டார்கள் [யாத் 16:3] நாமும் அநேக வேளைகளில் தேவன் செய்த எண்ணற்ற நன்மைகளையும், மேன்மைகளையும் மறந்து போகும் போது சாவை விரும்பிய இந்த ஜனங்களைப் போலத்தான் இருக்கின்றோம். உறவுகள், பொருளாதார இழப்புகளால் பாதிக்கபட்டதுடன் உடல் ஆரோக்கியமும் சீரழிந்ததால் யோபு தன் பிறந்த நாளை சபித்து, தன்னை தேவன் கொன்று போட்டால் நலமாயிருக்கும் என்றார் [யோபு 3:3 , 6:9] நம் கவலைகளைப் பெரிதுபடுத்திக் அந்த மாம்சசிந்தனையில் மூழ்கி நாம் தேவனை விட்டு விலக வேண்டுமென்பதே பிசாசின் தந்திரமாக உள்ளது.

அதிலிருந்து தப்பிக்கவே தேவன் நமக்கு சபை கூடுதலை வைத்துள்ளார். அப்போது தேவனுடைய வார்த்தைகள் நம் இருதயங்களை சீர்படுத்தி மகிழ்ச்சி உண்டாக்கும்.

அநேகமாயிரம் பொன், வெள்ளியை விட தேவனுடைய வார்த்தை மேலானது என்றும், திரளான செல்வத்தில் மகிழுவதைப் போல் உம்முடைய வேதத்தில் மகிழுகிறேன் என்றும் சங்கீதக்காரன் சொல்லுவதை இந்த இடத்தில் நினைவு கூருவோம்! வேதவாசிப்பும், ஜெபமும் நம்மை தேவனிடத்தில் கிட்டிச் சேர்க்கும் என்பதை நாம் மறக்கக் கூடாது. தேவனுடைய மனுஷனாகிய மோசே இஸ்ரவேல் ஜனங்கள் கொடுத்த உபத்திரவத்தில் சோர்ந்து போனவனாய் இப்போதே என்னைக் கொன்று போடும் என்று வேண்டிக் கொண்டான். ( எண் 11:15) அன்பான தேவப் பிள்ளைகளே சில சமயம் மற்றவர்களின் தொல்லைகள் நம்மை இந்தச் சூழ்நிலைக்குத் தள்ளிவிடும். அப்போது நாம், ''கலங்காதே, திகையாதே நான் உன் தேவன்'' என்று சொல்லும் நம் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டும்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் உங்களுக்கு ஒருவேளை மற்றவர் மத்தியில் நல்ல பெயர் இருக்கலாம். ஆனால், இவ்வுலகமும், மாம்சமும் உன்னை நிம்மதியாக இருக்க விடாது. எலியா என்ற வல்லமையான தீர்க்கதரிசியை நாம் பார்க்கும் போது தனி ஒருவனாக தேவ உதவி பெற்று 450 பாகால் தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டு தேவனை மகிமைப்படுத்தினான். ஆனால், அவனுக்கு நேர்ந்தது என்ன? ராணி யேசபேல் அவனைக் கொன்று போடுவேன் என்று சபதமிட்டதால், அவன் ஓடி ஒளிய வேண்டியதாயிற்று. மேலும், கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று வேண்டிக்கொண்டான் ( ராஜா 19:4). நீங்கள் ஒரு வேளை கர்த்தருக்காக வைராக்கியமாயிருப்பதால் மனுஷர் மத்தியில் தனிமைப்படுத்தப்படலாம். ஆனால், சோர்ந்து போகாதே, உன்னைப் போல அநேகர் அதே சூழ்நிலையில் கடந்து வருகிறார்கள் என்கிறார் கர்த்தர்.( ரோமர்11:4).

தன்னை விரோதித்த சவுலைக்கொன்று போடும் வாய்ப்பு தாவீதுக்கு வந்த போதும் அவன் அப்படிச் செய்யவில்லை. அப்படிப்பட்ட நல்லவனான தாவீது ஒருமுறை, தன் மனுஷரோடே ஊருக்குத் திரும்பி வந்தபோது அவர்களுடைய உடமைகள், மனைவி பிள்ளைகள் என்று எல்லாவற்றையும் எதிரிகள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். ஆனால், தேவனுடைய மனுஷனாக இருந்தபடியால் கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டான் (Iசாமு 30:6) என்று வாசிக்கின்றோம். பிற்பாடு தேவன் தாவீதின் எதிரிகளை அழித்து அவனை உயர்த்தினார். ஆகவே, நாம்

இக்கட்டான சூழ்நிலைகளைச் சந்திக்கும் போது தாவீதைப் போலக் கர்த்தருக்காகக் காத்திருக்க கற்றுக் கொள்வோம். தாவீது சொல்வதை கவனியுங்கள் – நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்– தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்.[சங் 56:3,4] என்கிறான். அடுத்து, என் இருயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கின்றன. என் இடுக்கண்களில் இருந்து என்னை நீங்கலாக்கிவிடும் என்று தேவனிடம் ஜெபிக்கின்றான். நாமும் ஜெபிப்போம்.

அப்பஜப் போலவே, யோனா துன்மார்க்க ஜனங்களாகிய நினிவேப்பட்டணத்தார் அழிக்கப்படவில்லை என்று கண்ட போது, நான் உயிரோடு இருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்[யோனா 4:8] என்று வேண்டிக் கொண்டான். நாமும் நம் வாழ்க்கையில் சந்திக்கும் துன்மார்க்கரின் சுகவாழ்வைக் கண்டு சோர்ந்து போகிறோம் [ சங் 73:13] ஆனால் சங்கீதக்காரன், பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே[37:1] என்கிறான். ஆகவே தேவன் நம் ஒவ்வொருவரையும் ஒரு நோக்கத்தோடே படைத் திருக்கிறார். நாம் வெறுமையான பாத்திரமாயிருந்தாலும் நம்மை பயன்படுத்தும் வல்லமை தேவனிடத்தில் உள்ளது என்று விசுவாசித்து நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து வாழ்வோம்.மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தது, எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி அபயமிட்டேன், தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார் [ சங் 18:5,6] எனவே, நம் தேவன் சாகிறவனுடைய சாவை விரும்பாதவர். ஆதலால், நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் [சங் 148:17] என்று நம்பிக்கையோடே சொல்லுவோம். தேவக்கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ★

## சிந்திக்கவும்

- ★ நீங்கள் எப்படி வாழ்கிறீர்களோ அதைவிட உயர்வான நிலையில் மற்றவர்கள் வாழும்படி அவர்கள் மேல் தாக்கத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம்
- ★ ஒவ்வொரு நாளும் நீங்கள் சரியாக வாழ்ந்தால், நாளையை குறித்து பயப்படமாட்டீர்கள். நேற்றைய தினத்தைக் குறித்தும் வெட்கப்படமாட்டீர்கள்.
- ★ தேவனுடைய தரிசனத்தை உடைய ஒரு மனிதன் வேறு எந்தக் காரியத்திலும் அர்ப்பணிப்புடன் இருப்பதில்லை; அவன் தேவனிடத்தில் மட்டுமே அர்ப்பணிப்புடன் இருக்கிறர்ன்.

# இயேசுவைத் தொழுது கொள்ளலாமா?

Bro. ஆறுமுகம்

## 1. ஆதியாகமம் 16:7-13

ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய ஆகார் சாராளுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்ட போது சூர் வனாந்திரத்தில் போய்த் துக்க முகமாயிருந்தாள். அப்பொழுது அவளுக்குத் தரிசனமான தேவ தூதனானவர், ....அவளை வனாந் திரத்திலே சூருக்குப் போகிற வழியருகே இருக்கிற நீரூற்ற ண்டையில் கண்டு... ஆறுதல் வார்த்தைகளைச் சொன்ன போது ஆகார் தனது மனதில் ஆறுதல் அடைந்தவளாக என்னை கண்டவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா? என்று சொல்லி கர்த்தருடைய தூதனுக்கு நீர் என்னைக் காண்கின்ற தேவன் என்று பேரிட்டாள் என்று வாசிக்கிறோம்.

a). ஆதி 16:13 ல் மேற்குறிப்பிட்ட ஆகார் கண்டதும், தான் ஆறுதலைடையும் வார்த்தைகளைச் சொன்னதும் யார்? எபிரேயர் 1:14 ல், சொல்லப்படுகிற நமது இரட்சிப்பினிமித்தம் அனுபப்படும்.பணிவிடையாகிய தேவ தூதனா? அப்படியானல் நீர் என்னைக் காண்கிற தேவன் என்று தேவனுடைய சிருஷ்டியாகிய தேவதூதனுக்கா தேவன் என்று பேரிட்டாள்?

b). மேற்குறித்த வசனத்தில் பேசப்படும் **தேவன்** எனும் பதம் எபிரேய மொழியில் ''ஏல் என்று பிரதானமாக ஒருமைப்'' பொருளில் அழைக்கப்படும் தேவன் (எபிரேய பொருள் அகராதி எண் 410).

c). இது யாத்திராகமம் 4:16 ல் மோசே ஆரோனுக்குத் தேவனாயிருப்பான் என்று பேசப்படுவது போன்றது அல்ல. சிலர் அப்படி போதிக்கின்றனர். தேவத்துவமாகிய ஜீவனுள்ள தேவனைக் குறிக்கும் இப்பதம் பன்மையில் (பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாகிய) மூன்று நபர்த்தத்துவத்தைக் குறிக்கிறது. அதாவது, மோசே தேவத்துவத்தைப் போல ( தேவனைப்போல - எபி. எண் 430) இருப்பான். ஆக, தேவன் சொல்லுகிற வார்த்தைகளை ஆரோனின் மூலம் மோசே வெளிப்படுத்தும் செயலை ஒப்பிட்டு பேசப்படுகிறதேயன்றி, மோசேயே **தேவனாகச்** சொல்லப்படவில்லை. யோவான் 10:25 ல்

பேசப்படுகிற தேவ வசனத்தைப் பெற்றவர்கள் தேவர்களா யிருப்பார்கள் என்பதோடும் ஒப்பிடப்படுகிற வார்த்தையுமல்ல.

d). தன்னுடன் பேசிய தேவதூதனுக்கு தன்னையும்றியாமல் ஆகார் அழைத்த தேவன் பிதாவாகிய தேவனுமல்ல. ஏனெனில்,வசனங்கள் 7,9,10,11 ஆகிய வசனங்களில் பிதா வாகிய தேவனை கர்த்தருடைய துதனானவர் என்று சொல்லுவது பொருத்தமாயிராது.

e). மேலும், படைக்கப்பட்ட தூதனை இது குறிப்பிடாமல் தூதனானவர் ''என்றார்'' என்ற மரியாதைச் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. பணிவிடை செய்யும் தூதர்கள் தூதன் அவன் போன்று வார்த்தைகளே பயன் படுத்தப்பட்டுள்ளது.

எனவே, கர்த்தருடைய தூதனானவர் எனும் வார்த்தை மேசியாவாகிய கிறிஸ்துவையே குறிக்கிறது. இப்பதம் பிதா வாகிய தேவனையும் குறிக்காது. ஏனெனில், தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்று வசனம் சொல்லுகிறது [ யோவான் 1:18] பிதாவாகிய தேவனைக் கண்டவன் உயிரோடிருக்கமாட்டான்[யாத்33:20] ஆகார் கர்த்தருடைய தூதனானவரைக் கண்டும் உயிரோடிருந்தாள். எனவே, தேவனைக் குறிப்பதில்லை.

## 2. ஆதியாகமம் 22:11,12.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்தி லிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார். அவன் இதோ அடியேன் என்றான். பிள்ளையாண்டான் மேல் கையைப் போடதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே, நீ அவனை உன் புத்திரனென்றும், ஏக சுதனென்றும் பாராமல் **எனக்காக** ஒப்புக் கொடுத்த படியால், நீ **தேவனுக்குப்** பயப் படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

* இங்கே ஆபிரகாமிடத்தில் பேசினது யார்? கர்த்தருயை தூதனானவர்.
* யாருக்காக [அவர்] ஆபிரகாம் தனது குமாரனை பலியிடச் சொன்னார்? தமக்காக[**எனக்காக**]
* அப்படியானால் இந்த கர்த்தருடைய தூதனான: பணிவிடை ஆவியாகிய தூதனுமல்ல [எபி.1:14] ஏனெனில், ஆபிரகாம் ஒரு தூதனுக்காவா பலியிடச் சென்னார்? இல்லை. எனவே, குமாரனாகிய இயேசுவையே குறிக்கிறது என்ற முடிவுக்கே வருகிறோம். பழைய ஏற்பாட்டில் மேலும் பல சம்பவங்களைக் காணலாம்.

# பரிபூரண மேய்ப்பனிடமிருந்து பரிபூரண ஜீவன்

**உ**லகிலுள்ள பெரும்பாலோரின் விருப்பமான வசனப்பகுதி சங்கீதம் 23. பரிபூரணத்தை வாக்குத்தத்தம் செய்கிறது. தேவன் எல்லையில்லா பண்டக சாலையாக இருக்கிறார். சங்கீதக்காரன் வெளிப்படுத்தினபடியே **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்** என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது. சங்கீதக்காரனின் கூற்றுப்படி நல்ல மேய்ப்பன் கீழ்க்காணும் காரியங்களைத் தருகிறார்.

| | | |
|---|---|---|
| ஆகாரம் | - | அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து |
| தண்ணீர் | - | அவர் அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் கொண்டுபோய் விடுகிறார் |
| புத்துணர்வு | - | அவர் என் ஆத்துமாவைத் தேற்றி |
| வழிகாட்டி | - | அவர் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் |
| நிச்சயம் | - | நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் |
| விடுதலை | - | பொல்லாப்புக்குப் பயப்படேன் |
| ஐக்கியம் | - | தேவரீர் என்னோடே கூட இருக்கிறார் |
| ஒழுங்கு | - | உமது கோல் |
| மீட்பு | - | உமது தடி |
| தேறுதல் | - | என்னைத் தேற்றும் |
| செழுமை | - | நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி |
| சுகம் | - | என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் |
| மகிழ்ச்சி | - | என் பாத்திரம் நிரம்பி வழிகிறது |
| விசுவாசம் | - | நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் |
| நம்பிக்கை | - | என் ஜீவனுள்ள நாளெல்லாம் |
| சுதந்திரம் | - | நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். |

**நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20).**

# சோதனை - சாதனையா? வேதனையா?

Bro. K.M. பிலிப்

இவ்வுலகவாழ்வில் கிறிஸ்தவம் நம் வாழ்க்கை முறைகளை நேர்த்தியாய் மாற்றி அமைத்துள்ளது. பிதாவகிய தேவன் நம்மை பரிசுத்தவான்களாக, நீதிமான்களாக, உத்தமர்களாக, சமாதானத்திற்கும், சந்தோஷத்திற்கு முரியவர்களாக, ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக நம்மை அலங்கரித்து, பரிசுத்த அலங்காரத்துடன் அவரைத் தொழுது கொள்ளும்படி, தமது குமாரனின் சபையில் சேர்த்து அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்படித்தான் ஆதியில் தேவன் ஆதாம், ஏவளைப் படைத்து சகல ஆசீர்வாதங்களாலும் அலங்கரித்து, ஏதேன் தோட்டத்தில் வைத்து அழகு பார்த்தார். ஆனால், அவர்களுடைய பரிசுத்த அலங்காரத்தைக் கெடுக்க சோதனைக்காரன் இடையில் புகுந்தான். தன் வஞ்சகப் பேச்சால் அவர்களுடைய பரிசுத்த அலங்காரத்தை அலங் கோலமாக்கி, ஏதேன் தோட்டத்தை இழந்து போகச் செய்தான்.

அன்பானவர்களே! இன்றும் நம் பரிசுத்த வாழ்வைக் கெடுத்து சபையை விட்டு வெளியேற்றுவதில் சோதனைக்காரன் ''சோதனை'' என்ற ஆயுதத்தை எடுத்துக் கொண்டு நம்மைச் சுற்றி வருகிறான். நம் நிலை என்ன? சோதனையை சாதனையாக மாற்றுவோமா? அல்லது வேதனையாக எண்ணி விலகிப்போவோமா? நம் (உங்கள்) சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து அசைவில்லாத ராஜ்ஜியத்தைப் பெறுகிறவர் களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி ( ரோ12:1, எபி 12:28 சபையில் நிலைத்து நிற்க இக்கட்டுரை வாயிலாகத் தேவன் கொடுக்கும் ஆலோசனைகளைப் பற்றிக் கொள்வோம்.

சோதனை என்பது வேதனைக்குரியதல்ல. விசுவாசிகள் ஒவ்வொருவரும் சந்திக்க வேண்டிய ஒன்று. சோதனைகளை நாம் பரீட்சை என்ற சிந்தனையோடு சந்தித்து, சாதனைகளாக மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வுலகில் நாத்திகர்கள், விக்கிரக ஆராதனைக்காரர்கள்கூட சந்திக்காத சோதனைகளை நாம் தான் அதிகம் சந்திக்கிறோம். ஆம் பள்ளிக்குச் செல்லும் மாணவனே பரீட்சைகளைச் சந்திக்கிறான். பரீட்சை அவனது

எதிர்காலத்தை பயமற்றதாக்குகிறது; உயர்த்துகிறது அதுபோல, பரலோகத்திற்கு செல்லுகிற நமக்குத்தான் பரிசோதனைகள். நாம் சந்திக்கும் ஒவ்வொரு பரீட்சையும் விசுவாசத்தில் உறுதியையும், உயர்வான பரலோக வாழ்க்கையையும் நமக்குப் பெற்றுதரும். சோதனை உண்மைக் கிறிஸ்தவனை மேலும் பலப்படுத்தும்; நிலை நிறுத்தும். ஆனால் பெயர்க் கிறிஸ்தவர்களையோ பெலவீனப்படுத்தி விழுந்து போகச் செய்யும். சோதனை தவிர்க்க முடியாதது. பறவைகள் நம் தலைக்கு மேல் பறப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனால், நம் தலையில் கூடு கட்டுவதைத் தவிர்க்க முடியுமல்லவா? ஆம், நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய், விழிப்புள்ளவர்களாய் இருந்து சோதனைக்குத் தப்பித்துக்கொள்ள இரண்டு தேவ ஆலோசனைகளை கருத்தாய் கவனிப்போம்.

**I. முதலாவது ஆலோசனை – பிசாசுக்கு [சோதனைக்காரனுக்கு] இடம் கொடாதிருங்கள்.[எபே:4:27].**

சோதிக்கப்படுவது பாவமல்ல.அது பிசாசின் வேலை. ஆனால், சோதிக்கப்பட இடம் கொடுப்பதே பாவம். இதைத் தான் பேதுரு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்[ Iபேது 5:8] என்று எச்சரிக்கிறார். ஏதேன் தோட்டத்தில் எவ்வளவு காலம் இருவரையும் சுற்றி வந்தானோ, தெரியவில்லை. ஆதாமுடன் எப்பொழுதும் ஏற்ற துணையாயிருக்கும்படி தேவ கட்டளை பெற்ற ஏவாள் தேவ கட்டளையை மீறி எப் பொழுது ஆதாமை விட்டு தனியாயிருந்தாளோ அப் பொழுதே சோதனைக்காரன் அவளைத் தன் வஞ்சக வலைவீசி பிடித்துவிட்டான். ஆம் கட்டளையை மீறுவது பாவம் என்பதையும் கட்டளையைக் காத்துக்கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்[நீ 19:16], என்பதையும் புரிந்து உணர்ந்துகொள்வோம். ஒருமுறை சபை கூடி வருதலை விட்டுவிடுவோமானால், சோதனைக்காரன் வலைவீசி வீழ்த்திவிடுவான். ஜெபிப்பது, வேதம் வாசிப்பது குடும்ப ஜெபம், என்று நம் விசுவாச வாழ்க்கையை சீர்குலைத்துப் போடுவான். ஒரு போதும் பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்.

ஆதித்திருச்சபையில், சபையார் எல்லோரும் தங்களுக்குண்டானதெல்லாம் விற்று அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தார்கள். அனனியாவும், சப்பிராளும் கூட

விற்றார்கள். ஆனால் பேதுரு சொல்வது போல் ஒரு பங்கை வஞ்சித்து வைக்கவும், எல்லாருக்கு முன் மாய்மாலமாய் நடந்து பரிசுத்த ஆவியானவருக்கு முன் துணிந்து பொய் சொல்லவும், இருதயத்தை நிரப்ப சத்தானுக்கு இடம் கொடுத்ததால் இருவருமே தங்கள் வாழ்க்கையை இழந்து போனார்கள். [ அப் 5:1-11]. இன்றும் சிலர் பிசாசுக்கு இடம் கொடுத்து மாய்மாலக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் குறித்து இயேசு ஒரே வார்த்தையில், ''மாயக்காரரே... உங்களுக்கு ஐயோ''[மத் 23:13] என்று எச்சரிப்பதை தயவு செய்து ஏற்றுக்கொண்டு, பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்.

ஆதி 39 ல் யோசேப்பினிடத்தில் பிசாசு விபச்சார இச்சையோடு நெருங்கிய போது, ''நான்... தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?'' என்ற உணர்வு மட்டுமல்ல பிசாசுக்கு இடம் கொடாமல் தப்பித்துக் கொள்ளும் படியான போக்காக , திறந்த கதவையும், ஓடுவதற்கு கால்களையும் தேவன் தனக்கு அனுகூலமாக கொடுத்திருப்பதையும் புரிந்து கொண்டு விலகி ஓடினான் என்று பார்க்கிறோம். அன்பானவர்களே! சோதனையில் சிக்கிக் கொள்ளாமல் தவிர்ப்பதற்கான வழியை வேதத்தின் மூலம் அவர் நமக்கு அளித்திருக்கிறார். ஆனால், முடிவெடுத்தலை நம்மிடத்தில் விட்டு விடுகிறார். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து பிசாசுக்கு இடம் கொடாமல் விசுவாசத்தைக் காத்துக் கொள்வோம்.

### II. சோதனைக்காரனை ஜெயிக்க அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்

**தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்த நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்** [யாக்: 4:7]. ஆம், பயந்து ஓடிக்கொண்டிருந்தால் அவன் துரத்திக் கொண்டே இருப்பான். தானியேல் 3-ல் மிகத் துனிச்சலாக வாழ்க்கையைப் பணயம் வைத்து பிசாசுக்கு எதிர்த்து நின்ற சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்களைப் பார்க்கிறோம். மூவரும் சிலைக்கு முன் நின்று மாய்மாலம் செய்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், மூவரும் ராஜாவுக்கு முன் நின்று ''நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார்'' என்று பகிரங்கமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். பிசாசுக்கு [ராஜாவுக்கு] எதிர்த்து நின்றனர். விசுவாசத்தை கனப்படுத்துகிற தேவன், மூவரையும் எரிகிற அக்கினியினின்று எடுத்து ராஜாவின் அரண்மனைவாசிகளாக வாழச்செய்தார். அங்கு இம்மூவரால் தேவ நாமம் மகிமைப்பட்டது. பிசாசு தோற்று ஓடிப்போனான்.

அன்பான தேவ ஜனமே! நம் விசுவாச வாழ்க்கைக்கு சிறு சோதனை வந்தாலும் பயந்து, அடிபணிந்து விடுகிறோம். மாய்மாலமான வாழ்க்கை வாழ ஆரம்பித்துவிடுகிறோம். ஆதித்திருச்சபையாரின் வீட்டிற்குள் புகுந்த பிசாசானவன் கெர்ஜித்துப் பார்த்தான்; சிதறடித்தான். ஆனால், நடந்தது என்ன? சபையாரோ அவனுக்கு எதிர்த்து நின்று , எங்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். சபைகள் பெருகின. சோதனைக்காரன் தோற்றுப்போனான். சபையாரே! விசுவாசத்தில் உறுதியயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். நம்மை இருளின் அதிகாரத்தினின்று மீட்டெடுத்த சர்வவல்ல தேவன் நம்மோடிருக்கிறார். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான்[வெ.21:7]. ஆம், கிறிஸ்துவின் வருகையில் அவரோடு அவருடைய சிங்காசனத்தில் உட்காருவான் [வெ3:21], தேவன் தாமே உங்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. ஆமென். ★

## நாளும் நடப்பும்

★ மழைக்கால விடுமுறை அறிவிப்பதில் புதிய கட்டுபாடுகள் அறிவிப்பு

★ கஜா புயலால் பாதிக்கப்பட்ட 10 லட்ச மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அமைச்சர் விஜய பாஸ்கர் அறிவிப்பு.

★ ஜனவரி 1ம் தேதி முதல் ஏ.டி.ம் கார்டுகள் செல்லாமல் போகும் என வங்கிகள் அறிவிப்பு.

★ அசல் ஓட்டுநர் உரிமத்தை டிஜிட்டல் முறைமைக்கு மாற்றியது உயர்நீதி மன்றம்

★ ஆண்டுக்கு 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை தர மத்திய அரசு வாக்குறுதி

★ உலகக் கோப்பை ஹாக்கியில் இந்திய அணி காலிறுதியில் வெற்றி.